26572

**சுருக்கம்**

கட்டடங்கள் – அரசுக்கு சொந்தமான பழமையான, பராமரிப்பில்லாத கட்டடங்களை விற்றல் அல்லது இடித்தல் – பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் தலைமைப் பொறியாளர் ஆகியோரின் அதிகார வரம்பினை உயர்த்துதல் மற்றும் தமிழ்நாடு பொதுப்பணித்துறை விதித் தொகுப்பிற்கு திருத்தங்கள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (ஜி2) துறை**

அரசாணை (நிலை) எண் 63

நாள். 04.03.2014
ஸ்ரீவிஜய, மாசி 21
திருவள்ளுவர் ஆண்டு 2045

**படிக்க**

1. அரசாணை(நிலை)எண்.165,பொதுப்பணி (ஜி2) துறை,நாள்.22.05.2008

**மேலும் படிக்க**

2. முதன்மைத் தலைமைப் பொறியாளர்(கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை, சென்னை கடித எண்.தலஅ(அ)/44367/2007, நாள்.22.05.2012.

..........

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 1984ல் நிர்ணயிக்கப்பட்ட அரசு கட்டடங்களை இடிப்பதற்கான கழிவு அறிக்கைக்கு (Survey Report) ஒப்புதல் அளிப்பதற்கான பொதுப்பணித்துறை அலுவலர்களின் நிதி அதிகார வரம்பை உயர்த்தி பின்வருமாறு நிர்ணயம் செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டது:–

| | |
|---|---|
| தலைமைப் பொறியாளர் | ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| கண்காணிப்புப் பொறியாளர் | ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| செயற்பொறியாளர் | ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |

2. அதற்கிணங்க, தமிழ்நாடு பொதுப்பணித்துறை விதித்தொகுப்பின் அத்தியாயம் III-ல் பத்தி 235ல் கீழ்க்கண்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டும் ஆணை வெளியிடப்பட்டது:–

- பத்தி 235ல் ரூ.10,000, ரூ.5,000, ரூ.1,000 என்ற இலக்கங்களுக்கு பதிலாக ரூ.10,00,000, ரூ.5,00,000, ரூ.1,00,000 என்ற இலக்கங்கள் அமைக்கப் பெறுதல் வேண்டும்.
- பத்தி 235ன் கீழ் உள்ள குறிப்பு 3ல் ரூ.10,000, ரூ.5,000 அல்லது ரூ.1,000 என்ற இலக்கங்களுக்கு பதிலாக ரூ.10,00,000, ரூ.5,00,000 அல்லது ரூ. 1,00,000 என்ற இலக்கங்கள் அமைக்கப் பெறுதல் வேண்டும்.

3. மேலே படிக்கப்பட்ட அரசாணை மூலமாக வழங்கப்பட்டுள்ள பொதுப்பணித்துறை அலுவலர்களின் நிதி அதிகார வரம்பினை உயர்த்தி வழங்குவது தொடர்பாக முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, அவர்கள் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் திருத்திய கருத்துருவை கீழ்கண்டவாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்:–

| வ. எண். | பதவி | அரசாணை (நிலை) எண். 1806, பொ.ப.து. நாள் 31.08.1984 மூலமாக வழங்கப்பட்டுள்ள நிதி வரம்பு | அரசாணை (நிலை) எண். 165, பொ.ப.து. நாள் 22.05.2008 மூலமாக வழங்கப்பட்டுள்ள நிதி வரம்பு | 22.05.2012 நாளிட்ட கடிதம் மூலமாக பரிந்துரை செய்யப்பட்ட நிதிவரம்பு | தற்போது பரிந்துரை செய்யப்படும் திருத்திய நிதி வரம்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | தலைமைப் பொறியாளர் | ரூ.50,000/– | ரூ.10.00 இலட்சம் | ரூ.50.00 இலட்சம் | ரூ.20.00 இலட்சம் |
| 2 | கண்காணிப்புப் பொறியாளர் | ரூ. 25,000/– | ரூ. 5.00 இலட்சம் | ரூ.25.00 இலட்சம் | ரூ.10.00 இலட்சம் |
| 3. | செயற் பொறியாளர் | ரூ. 5,000/– | ரூ. 1.00 இலட்சம் | ரூ. 5.00 இலட்சம் | ரூ.2.00 இலட்சம் |

மேலும், மேற்கண்ட அட்டவணையில், இனம் (6)–ல் குறிப்பிட்டுள்ளவாறு, அரசுக்குச் சொந்தமான கட்டடங்களை இடிப்பதற்கு கழிவறிக்கை ஒப்புதல் வழங்குவதற்கான நிதி வரம்பினை கட்டடத்தின் புத்தக மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உயர்த்தி வழங்கிட அரசின் ஒப்புதலைப் பெற்று வழங்குமாறும் முதன்மைத் தலைமைப் பொறியாளர்(கட்டடம்), தலைமைப் பொறியாளர்(கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, அவர்களது கருத்துருவினை, அரசு கவனமுடன் பரிசீலித்து, அரசாணை (நிலை) எண். 165, பொதுப்பணி (ஜி2) துறை, நாள் 22.05.2008–ல் வழங்கப்பட்டுள்ள பொதுப்பணித்துறை அலுவலர்களின் நிதி அதிகார வரம்பினை உயர்த்தி வழங்குவதற்கு ஏற்ப, பொதுப்பணித்துறை விதித் தொகுப்பு பத்தி எண் 235–ன் கீழ், குறிப்பு(3)–ல் ஒரே வளாகத்தில் உள்ள ஒன்றுக்கு மேலுள்ள கட்டடங்களை விற்பது மற்றும் இடிப்பதற்கான கூட்டுப் புத்தக மதிப்பில் பின்வரும் திருத்திய நிதி வரம்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | பதவி | தற்போது பரிந்துரை செய்யப்படும் திருத்திய நிதி வரம்பு |
|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் | ரூ.20.00 இலட்சம் |
| 2 | கண்காணிப்புப் பொறியாளர் | ரூ.10.00 இலட்சம் |
| 3. | செயற் பொறியாளர் | ரூ.2.00 இலட்சம் |

3. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 4400/PW-4/13, நாள் 01.02.2013-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். சாய்குமார்
அரசுச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டடம்)
சென்னை மண்டலம் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)
பொதுப்பணித்துறை, சென்னை—5
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை—5
அனைத்து தலைமைப் பொறியாளர்கள், பொதுப்பணித்துறை
மாநில கணக்காயர்(A&E) அலுவலகம், சென்னை—18
மாநில கணக்காயர்(Audit)அலுவலகம், சென்னை—18
உடனுறை தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலகணக்காயர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை—9.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை—9

<u>நகல்</u>

தலைமைச் செயலக அனைத்து துறைகள்,சென்னை—9
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9
அமைச்சர்(நிதி(ம)பொதுப்பணி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை—9
அனைத்து பிரிவுகள்,பொதுப்பணித்துறை, சென்னை—9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்